# ஒப்பீட்டு அரசியல்

## பிரித்தானியா



K. சுகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியா

உலகில் நீண்டகால வரலாற்றைக் கொண்டதும் தனித்துவமான பண்புகளை தன்னகத்தே கொண்டதுமான நாடு பிரித்தானியா ஆகும். பிரித்தானியாவில் பண்டைக்காலம் தொட்டு முடியாட்சி நிலவி வந்தது. ஆனால் பாராளுமன்ற முறை அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் பிற்பாடு வரையறுக்கப்பட்ட முடியாட்சியே நிலவுகின்றது. பிரித்தானிய அரசியலமைப் பானது எழுதப்படாத, நெகிழும், ஒற்றையாட்சி யாப்பாக காணப்படுகின்றது. உலகில் முதன்முதலில் பாராளுமன்றம் என்ற அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டதும் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றதும் பிரித்தானியாவிலேயே ஆகும். இதனாலேயே பிரித்தானியப் பாராளுமன்றம் "பாராளுமன்றங்களின் தாய்" என்று வர்ணிக்கப்படுகிறது.

## சட்டத்துறை

பிரித்தானியாவின் சட்டத்துறை "பாராளுமன்றம்" என்று அழைக்கப்படுகிறது. இது ஈரங்க சட்டசபையாகும்

1. பொதுமக்கள் சபை
2. பிரபுக்கள் சபை

## பொதுமக்கள் சபை

இச் சபை "முதலாம் மன்றம் அல்லது கீழ் சபை" என்று அழைக்கப்படுகிறது. பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் 640 உறுப்பினர்களை கொண்டுள்ளது. பிரித்தானியாவில் ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதி முறையே நடைமுறையில் உள்ளது. பொதுமக்கள் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 05 வருடங்கள் ஆகும். பொதுமக்கள் சபையின் தலைவர் சபாநாயகர் ஆவார்.

சட்டங்களை இயற்றுவதே இதன் பிரதான அதிகாரம் ஆகும். அதுவும் நிதி மசோதா முதன் முதலில் இச் சபையிலேயே பிறப்பிக்கப்பட வேண்டும்



K.சுகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சிம்மாசன உரையை அங்கீகரித்தல், நிதியைக் கட்டுப்படுத்தல், நிர்வாகத்துறையை கட்டுப்படுத்தல், பொதுமக்களின் பிரச்சனைகளை முன்வைத்தல், எதிர்காலத்தலைவர்களை பயிற்றுவித்தல், நிறைவேற்றுக்குழுக்களை நியமித்தல், நீதிபதிகளை பதவியிலிருந்து நீக்குதல் போன்ற அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

நிறைவேற்றுத்துறைக்குப் பொறுப்பான பிரதமரும் அமைச்சரவையும் பொதுமக்கள் சபைக்கு பொறுப்பு கூறவேண்டும். பொதுமக்கள் சபையில் அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்படுமிடத்து பிரதமரும் அமைச்சரவையும் பதவிவிலக வேண்டும். ஆகவே நிறைவேற்றுத் துறையை கட்டுப்படுத்துகின்ற வல்லமையுடையதாக இது காணப்படுகின்றது. பிரித்தானிய பாராளுமன்றமானது இரு சபைகளைக் கொண்டிருந்தாலும் பொதுவாக பாராளுமன்றம் எனும் போது பொதுமக்கள் சபையையே குறித்து நிற்கின்றது.

**பிரபுக்கள் சபை**

இச்சபை "இரண்டாவது மன்றம் என்றும் மேல் சபை என்றும் அழைக்கப்படுகின்றது. இச்சபை சுமார் 750 உறுப்பினர்களை கொண்டுள்ளது. பரம்பரைப் பிரபுக்கள் ஆயட்காலப் பிரபுக்கள் என பலவகைப்பட்ட பிரபுக்கள் இங்கு உறுப்புரிமை பெறுகின்றனர். பிரபுக்கள் சபையின் தலைவராக "சான்ஸலர் பிரபு" விளங்குவார். பிரபுக்கள் சபை நிரந்தரமானதாகும்.

பிரித்தானிய அரசியல் முறையில் பிரபுக்கள் சபை "இரண்டாம் மன்றம்" என அழைக்கப்பட்டாலும் உண்மையிலேயே அது ஒரு இரண்டாம் மன்றமாக அன்றி பொதுமக்கள் சபை பெற்றுள்ள அதிகாரங்களைவிட குறைவான அதிகாரங்களையே பெற்றிருப்பதோடு அது பொதுமக்கள் சபைக்கு கட்டுப்படும் ஓர் இரண்டாம் மன்றமாக கருதப்படுகின்றது. அதன் பிரதான பணிகளாவன:

அ) பொதுமக்கள் சபையில் அவசர அவசரமாகவும் தூர நோக்கின்றியும் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் சட்டமாவதற்கு முன் கூர்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசீலனைகளுக்கு உட்படுத்தி அவற்றுக்கு தேவையான திருத்தங்களை முன்வைத்தல்.

ஆ) நெருக்கடிகள் அற்ற விடயங்களை உள்ளடக்கிய சட்டங்களை பிரபுக்கள் சபையில் ஆரம்பித்து வைத்து பொதுமக்கள் சபைக்கு உதவியாக செயற்படுதல். இதன்மூலம் பொதுமக்கள் சபையின் சுமையை குறைக்க முடியும்.

இ) பொதுமக்கள் சபை நிறைவேற்றும் சட்டங்கள் தொடர்பாக பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு வாய்ப்பு வழங்குவதற்கு சம்பந்தப் பட்ட மசோதாவை தாம் தீர்மானிக்கும் காலப்பகுதிக்கு தாமதப்படுத்தி வைத்தல்.

ஈ) முக்கியமான அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சனைகள் பற்றி சுதந்திரமானதும் காத்திரமானதுமான விவாதங்களை நடாத்தி முன்வைக்கப்படும் கருத்துக்கள் மூலம் வேலைப்பளுமிக்க பொதுமக்கள் சபைக்கு உதவியாகச் செயற்படல்.

இதன்படி இன்று பிரபுக்கள் சபையின் அதிகாரங்களும் பணிகளும் பெரும்பாலும் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் பிரதான அதிகாரங்களும் பணிகளும் வருமாறு:

- ❖ சாதாரண மசோதாக்களை ஆரம்பித்து வைக்கும் அதிகாரம்

- ❖ பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டு அதன் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும் மசோதாக்களை நிறைவேற்றல்.

- ❖ மசோதாக்களை காலதாமதப்படுத்தும் அதிகாரம் : நிதி மசோதாவை 1மாத காலத்திற்கும் சாதாரண மசோதாவை 1வருட காலத்திற்கும் காலதாமதப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிரித்தானியாவின் இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாக செயற்படல்: பிரபு நாயகனின் தலைமையில் வேறு சட்டப்பிரபுக்கள் 9பேரையும் கொண்ட ஒரு குழு ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் சிவில் மற்றும் குற்றவியல் மேன்முறையீடுகள் விசாரணை செய்யப்படுகின்றன. இந்தக் குழு பொதுவாக "கோமறைக் கழகம்" என அழைக்கப்படுகின்றது.

**நிர்வாகத்துறை**

பிரித்தானியாவின் நிர்வாகத்துறையானது நாம நிர்வாகம், உண்மை நிர்வாகம் ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. நாம நிர்வாகமாக முடியும் உண்மை நிர்வாகமாக பிரதமரும் அமைச்சரவையும் விளங்குகின்றது.

**பிரித்தானிய முடி**

பிரித்தானிய அரசாங்க முறையில் முடி நாம நிர்வாக (பெயரளவு நிர்வாகம்) நிலையை வகிக்கிறது. அது உண்மையான அதிகாரத்தைக் கொண்டதல்ல. "யாப்புறு முடி" என்றவகையில் முடியின் சகல செயற்பாடுகளும் பாராளுமன்றின் கட்டுப்பாடுகளுக்கு உட்படுகின்றன. முடி சில உத்தியோக ரீதியான பணிகளை நிறைவேற்றுவதனால் அதற்கு அரசியல் அதிகாரம் இருப்பது போன்று தென்பட்டாலும் அப்பணிகள் தொடர்பாக முடி தற்துணிவின்படி செயற்பட முடியாததுடன் அவை அனைத்தும் பாராளுமன்றினதும் பிரபுகளினதும் கட்டுப்பாட்டின் கீழ் முடியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நாமச் செயற்பாடுகளாகும்.

**தற்கால பிரித்தானிய அரசியல் முறையில் முடி நிறைவேற்றும் பணிகளாவன:**

அ) உத்தியோக ரீதியான பணிகள்

- பாராளுமன்றைக் கூட்டல், கலைத்தல், ஒத்தி வைத்தல்
- சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துதல்
- பிரதமரை நியமித்தலும் அவரின் சிபார்சின் பெயரில் ஏனைய அமைச்சர்களை நியமித்தலும்.
- சில நிறைவேற்று நியமனங்களைச் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) அடையாளப் பணிகள்

- **அரசின் தலைவர் என்றவகையில் :**

அரசியல் சாராத வகையில் தேசத்திற்கு உயர் இடத்தைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக இது முக்கியம் பெறுகின்றது.

- **பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்றவகையில் :**

இவ் உறுப்பு நாடுகளுக்கிடையில் ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் முடி அடையாளப்படுத்துகிறது.

- **முடியை அடையாளப்படுத்துதல்:**

அமைச்சர்கள், நீதித்துறை அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், வெளிநாட்டு சேவை அதிகாரிகள் அனைவரும் தமது பணிகளை முடியின் பெயரால் மேற்கொள்கின்றனர்.

- **கௌரவப்பட்டங்களை வழங்குதல்:**

இவற்றுள் பெரும்பாலானவை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும் Order of merrit, The Garter, The thistle போன்ற கௌரவப் பட்டங்கள் முடியின் தனிப்பட்ட தெரிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்கூறிய விடயங்களிலிருந்து முடி ஒரு பெயரளவும் பதவியாகும் என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் வோல்டர் பெகொட் குறிப்பிடுவதின்படி முடியின் மதியுரை வழங்கும் உரிமை, விடயங்களைக் கேட்டறியும் உரிமை, ஊக்குவிக்கும் உரிமை என்பன காரணமாக பிரித்தானிய அரசியல் முறைமையில் முடியின் தாக்கம் செலுத்தும் திறனை குறைத்து மதிப்பிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானியப் பிரதமர்

பிரித்தானியாவில் கபினட் அரசாங்க முறையே நடைமுறையில் உள்ளது. கபினட் முறையில் நிறைவேற்றுத்துறையானது நாம நிர்வாகம், உண்மை நிர்வாகம் என்ற இரு பகுதிகளை கொண்டிருக்கும். பிரித்தானிய முறையில் மகாராணி நாம நிர்வாகி ஆவார். பிரதமர் உட்பட அமைச்சரவை உண்மையான நிர்வாகமாக இருக்கம். ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளின்படி கபினட் அரசாங்க முறையில் நாம நிர்வாகியே அரசின் தலைவரும் நிறைவேற்றுத்துறையின் தலைவரும் ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதான தளபதியும் ஆவார். பிரதமர் அரசியல் நிர்வாகத்தின் தலைவர் ஆவார். அதனால் அவரே அரசாங்கத்தின் தலைவர் ஆவார். இதன்படி கபினட் அரசாங்க முறையில் பிரதமர் பெற்றுக்கொள்ளும் அதிகாரங்களும் பணிகளும் ஜனாதிபதி முறையில் ஜனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் விட குறைவானதாக காணப்படுகின்றது. நடைமுறை நிலை இதனைவிட வேறுபட்டதாகும். ஜனாதிபதி முறையில் ஜனாதிபதியைப் போன்றே கபினட் முறையில் பிரதமரும் அதிகாரங்களை பெற்றுள்ளார். இந்தப் பொருள் விளக்கம் பிரித்தானியப் பிரதமருக்கும் பொருந்தும். கோட்பாட்டு ரீதியாக பிரித்தானியப் பிரதமர் அரசாங்கத்தின் தலைவராக மட்டும் செயற்பட்டாலும் நடைமுறையில் அவர் நிறைவேற்றுத்துறையின் தலைவராகவும் முப்படைகளின் பிரதம தளபதியாகவும் செயற்படுகின்றார்.

இதனடிப்படையில் பிரித்தானிய அரசாங்க முறையில் அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான நபர் பிரதமர் ஆவார். பிரித்தானிய அரசாங்க இயந்திரத்தின் பிரதான சில்லான கபினட்டின் உறுப்பினர்களை பிரதமரே நியமிக்கின்றார். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அமைச்சுப் பொறுப்புக்களை அவரே தீர்மானிக்கின்றார். பிரதமர் தான் விரும்பும் நேரத்தில் கபினட்டை மாற்றியமைக்கின்றார். அமைச்சர்களை பதவியிலிருந்து அகற்றுகின்றார். அரச கொள்கைகளை வருப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பிரதான பொறுப்பினை ஏற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் உயர் மட்ட நிறைவேற்றுப் பதவிகளை யார் வகிக்க வேண்டும் என்பதனை தீர்மானிக்கின்றார்.

பிரதமரே பாராளுமன்றின் பொதுமக்கள் சபையின் தலைவரும் ஆவார் அரசாங்கத்தின் பிரதான பேச்சாளரும் ஆவார். எதிர்க்கட்சியினை எதிர்கொண்டு அரசாங்கத்தினைப் பாதகாத்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பினைப் பெற்றவரும் ஆவார். பொதுமக்கள் சபையைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல் ஆகிய தீர்மானங்களை மேற்கொள்கின்றார். நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்துகின்றார். முக்கியமான அரச தலைவர்கள் மாநாடுகளில் பிரித்தானியாவை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றுகின்றார். போர் மற்றும் சமாதானம் பற்றிய இறுதித் தீர்மானங்களை அவரே மேற்கொள்கின்றார்.

மேற்குறிப்பிட்ட விடயங்களின்படி பிரித்தானிய அரசாங்கம் என்பது "பிரதமரின் அரசாங்கமாக" காணப்படுகின்றது. பிரதமரின் ஆட்சிக்கு பாராளுமன்றில் ஒரு நிலையான பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப்பெறின், பிரதமர் உயர் ஆளுமை பொருந்தியவராக இருப்பின் உண்மையிலேயே அவர் ஒரு சர்வாதிகாரியாக செயற்படுவதற்குரிய வாய்ப்பு உண்டு. இதன்படி பிரித்தானியப் பிரதமரானவர் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் பிரான்ஸிய ஜனாதிபதி ஆகியோரைப் போன்றே பலம் வாய்ந்த தலைவராக காணப்படுகின்றார்.

- தற்போது பிரித்தானியாவின் பிரதமர் பதவியை ~~டேவிட் கமரூன்~~ தெரேசா மே அலங்கரிக்கின்றார்.



K.சுகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரித்தானிய நீதித்துறை**

- பிரித்தானிய நீதிமன்றக் கட்டமைப்பானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
  1. சிவில் நீதிமன்றம்
  2. குற்றவியல் நீதிமன்றம்

- சிவில் நீதிமன்றக் கட்டமைப்பினுள் கவுண்டி நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம், பிரபுக்கள் சபை போன்றன இடம்பெறுகின்றன.

- மேல் நீதிமன்றம் பின்வரும் 03 பகுதிகளைக் கொண்டுள்ளது.
  1. அரசியின் நீதிமன்றம்
  2. குடும்ப நீதிமன்றம்
  3. சான்ஸலர் நீதிமன்றம்

- சிவில் நீதிமன்றக் கட்டமைப்பின் அதியுயர் நீதிமன்றமாக பிரபுக்கள் சபை விளங்குகின்றது.

- குற்றவியல் நீதிமன்றக் கட்டமைப்பினுள் சமாதான நீதிவான்கள், மும்மாத நீதிமன்றங்கள், பிரிவுக்கவுன்ஸில், பிரதேச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிரபுக்கள் சபை ஆகியன இடம்பெறுகின்றன.

- பிரித்தானிய சிவில் மற்றும் குற்றிவயல் நீதிமன்றக் கட்டமைப்பின் அதியுயர் நீதிமன்றமாக் பிரபுக்கள் சபை காணப்படுகின்றது. இதுவே பிரித்தானியாவின் உயர்நீதிமன்றமாக தொழிற்படுகின்றது. அதாவது பிரபுக்கள் சபையில் இடம்பெறுகின்ற சட்டப் பிரபுக்கள் ஒன்பது பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோமறைக்கழகம் என்ற பெயரில் பிரித்தானியாவின் உயர்நீதிமன்றமாகத் தொழிற்படுகின்றனர்.

- பிரித்தானிய பாராளுமன்றமானது "பாராளுமன்ற இறைமை" என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கின்றமையால் நீதித்துறைக்கு "நீதிப்புனராய்வு அதிகாரம்" வழங்கப்பட்டிருக்கவில்லை.

**பிரித்தானியக் கட்சி முறை**

பிரித்தானியாவில் இரு கட்சி முறை காணப்படுகின்றது. அங்கு பல சிறிய கட்சிகள் காணப்படினும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் அளவுக்கு அவை இன்னும் பலம் பெறவில்லை. இன்றும் பிரித்தானியாவில் பிரதான இரு கட்சிகளே காணப்படுகின்றன.

1. பழமைபேண் கட்சி (கன்சர்வேடிவ் கட்சி)
2. தொழிற் கட்சி

ஒவ்வொரு தேர்தல் முடிவும் வாக்காளர்களில் 70% ஆனோர் இன்னும் பழமைபேண் கட்சியுடனும் தொழில் கட்சியுடனுமே தொடர்புபட்டுள்ளனர் எனக் காட்டுகின்றது. பிரதான கட்சிகள் மீதான கவர்ச்சியில் குறையும் போக்கு தென்பட்டாலும் எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ தேர்தல் முறை, சிறிய கட்சிகள் பிரதேச ரீதியாகவும் (ஸ்கொட்லாந்து தேசியக்கட்சி, வேல்ஸ் தேசியக்கட்சி) சமூக ரீதியாகவும் (லிபரல் ஜனநாயக்கட்சி) வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருந்தல், பழமை போற்றும் பண்பை உடைய பிரித்தானிய வாக்காளர்கள் இன்னும் பிரதான இரு கட்சிகளையும் கைவிட ஆயத்தமின்மை என்பன இந்நிலைக்குரிய காரணங்களாகும்.

பிரித்தானியாவிலுள்ள சாதாரண பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை, ஒருமைத்தன்மை வாய்ந்த சமூக முறை, மக்களின் பழமை பேணும் தன்மை ஆகியன இருகட்சி முறைமை அமைய அடிப்படைக் காரணங்கள் ஆகும். பிரித்தானிய மக்கள் புதுமையை வரவேற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் புதுமையில் புகுபவர்கள் அல்ல. இரு பிரதான கட்சிகளும் நாட்டின் அடிப்படை விடயங்களில் (பொருளாதாரம், பாதுகாப்பு என்பவற்றில்) ஒற்றுமை உடையன. எனவே பிரித்தானிய மக்களுக்கு புதிய கட்சிகள் உருவாக வேண்டுமென்ற தேவைப்பாடு குறைவாகவே உள்ளது.

**பிரித்தானிய இருகட்சி முறையின் அடிப்படை இயல்புகள்:**

- நீண்டகால வரலாற்றையம் வளர்ச்சியையும் கொண்டிருத்தல்
- சிறந்த ஒழுங்கமைப்பைக் கொண்டிருத்தல்
- அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக இரு கட்சிகளுக்குமிடையில் கருத்தொருமைப்பாடு காணப்படுதல்.
- பலம் மிக்க ஆளும் கட்சி போலவே எதிர்க்கட்சியும் பலம் மிக்கதாக காணப்படுதல்
- காலத்தின் தேவைக்கேற்ப கட்சிக் கொள்கைகளைத் தயாரித்தல்
- அண்மையில் நடைபெற்ற பிரித்தானிய பாராளுமன்றத்திற்கான தேர்தலில் [illegible] லேபர் கட்சி அதிக ஆசனங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**DCM** யாழ்நகர்

- தாயகம் டிஜிற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org